**தலைப்பு 194 – தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய

வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுடன் இணங்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த தேவையிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 7(VI) ஆம் பந்தியின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய மீதி அத்திகதியில் உள்ளவாறு காசேட்டில் குறிப்பிடப்பட்ட மீதிக்கு சமமாக இல்லாமையினால் அந்த மீதியை இணக்கஞ் செய்வதற்காக கட்டு நிதி சீராக்கல் கணக்கொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு தயாரிக்கப்படவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டுநிதி சீராக்கல் கணக்கு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான சுற்றறிக்கையுடன் சரியான படிவவொன்று வழங்கப்படாமையினாலும், அது நிதிக்கூற்றுக்களுடன் இணைப்பொன்றாக சமர்ப்பிக்கப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கப்படாமையினால் தயாரிக்கப்பட்ட கட்டு நிதி சீராக்கல் கணக்கின் பிரதியொன்று கணக்கு அறிக்கையுடன் இணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவில்லை. கணக்கு கூற்றுக்களுடன் இதனை சமர்ப்பிக்குமாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரே ஆலோசனை |

வழங்கப்பட்டிருந்தது.

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சினால் வருமானமல்லாத ஏனைய பெறுவனவாக வருமானக் குறியீடு 04 இன் கீழ் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 2,933,477 ஆக இருந்த போதிலும், அப்பெறுமதி ரூபா 1,630,104 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ஏனைய பெறுவனவுகள் ரூபா 1,303,373 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதியை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அமைச்சினால் வருமானக் குறியீடு 04 இன் கீழ் செலவு வைக்கப்பட்ட தொகை மாதாந்த கணக்குப் பொழிப்பின் மூலம் அறிக்கையிடப்பட்டிடுள்ளது. அதன்போது காசாக செலவு வைக்கப்பட்டவைகளைப் போன்று செலவு பதிவின் மூலம் செலவு வைத்தல்களும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அமைச்சினால் காசு மற்றும் வரவு வைத்தல் மூலம் வருமானம் அறிக்கையிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | பிரதான பேரேட்டுச் செலவினம் ரூபா 4,726,026 ஆக கணக்கில் காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த மீதி ரூபா 19,589,957 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | பிரதான பேரேட்டுச் செலவினம் வைப்புக் கணக்கிலும் முற்பணக் கணக்கிலும் செலவினங்களின் கூட்டுத்தொகையாக தயாரிக்கப்பட வேண்டிய போதும், விளக்கமான ஆலோசனை இல்லாமையினால் முற்பணக் கணக்கிலும் வைப்புக் கணக்கிலும் செலவினங்கள் தனித்தனியாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் கட்டுநிதி சீராக்கல் கணக்கிலுள்ள பெறுமதி பிரதான பேரேட்டில் செலவினத்தின் கீழ் பதியப்பட்டிருந்தது. கட்டுநிதி சீராக்கல் கணக்கின் மீதி பதிவதற்கு தனிப்பட்ட இடமொன்று காணப்படாமையே காரணமாக இருந்தது. |

**1.6.3 நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி மற்றும் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அறிக்கையில் காசல்லாத சொத்துக்களின் பெறுமதி என்பன முறையே ரூபா 139,291,689 தொகை மற்றும் ரூபா 138,451,124 தொகை ஆனமையால் ரூபா 840,565 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பெறுமதியை சரி செய்து கணக்கு வைக்க வேண்டும். | நிதிக்கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள காசல்லாத சொத்துக்களின் பெறுமதிகளுக்கும் கட்டுப்பாட்டாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளுக்குமிடையே அரச கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கும் கட்டுப்பாட்டாளரினால் சொத்துக்களை குறியிடுவதற்காக வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்குமிடையே உள்ள பரஸ்பர வேறுபாடு காணப்படுகின்றது. |

**1.6.4 காசுப்பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சலை கவனத்தில் கொள்ளும் போது மிகைக் கட்டணம், தண்டப்பணம் மற்றும் அனுமதிப்பத்திரமாக சேகரிக்கப்பட்ட ரூபா 2,933,477 தொகைக்குப் பதிலாக ரூபா 2,201,846 தொகை கணக்குகளுக்கு எடுக்கப்பட்டமையால் அந்த மீதி ரூபா 731,631 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. வைப்புப் பெறுவனவுகள் ரூபா 11,667,421 தொகை கணக்குகளுக்குக் கொண்டு | செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் மிகைக் கட்டணம், தண்டப்பணம் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணங்களின் சரியான பெறுமதி காண்பிக்கப்பட்ட வேண்டி இருந்ததுடன் அதன் கீழ் வைப்பு பெறுவனவாக ரூபா 11,667,421 தொகை காண்பிக்கப்பட வேண்டும். | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரித்தல் தொடர்பாக எந்தவித ஆலோசனையும் உரிய சுற்றறிக்கைகளுடன் வழங்கப்பட்டிருக்கவில்லை. காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது உள்ளபடியான தொகையில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் உள்ளபடியான தொகையில் பெறுவனவுகள் என்பவற்றை கவனத்தில் கொள்ளும் போது குறுக்குப் பதிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகள் உள்ளடக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | வரப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 12,399,052 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான பணத்தை கணக்கு வைக்கும் போது ரூபா 3,177,632 தொகையான முற்பணப் பெறுவனவுகள் மற்றும் ரூபா 3,524,839 தொகையான முற்பணக் கொடுப்பனவுகள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணப் பெறுவனவுகள் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழும் முற்பணக் கொடுப்பனவுகள் அந்த பாய்ச்சலின் செலவினத்தின் கீழும் காண்பிக்கப்பட வேண்டும். | முதலீட்டு செயற்பாடுகளின் மூலம் உருவான காசுப்பாய்ச்சலின் (d) கீழ் எந்தவொரு தொகையும் காசுப்பாய்ச்சல் கூற்றில் குறப்பிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே முதலீட்டு செயற்பாடுகளுக்காக ஏற்பட்ட செலவினத்தின் கீழ் முற்பணக் கொடுப்பனவுகள் பதியப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளை கைப்பற்றுதல் ரூபா 3,053,418,021 ஆக இருந்த போதிலும், அது ரூபா 3,043,679,597 ஆக முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 9,738,424 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உள்ளபடியாக காசாக செலவிடப்பட்ட செலவினம் ஆகையால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பிரகாரம் சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவதானிப்பின் போது சுட்டிக் காண்பிக்கப்பட்டது. | மூலதனச் செலவினங்களுக்காக செலவிடப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 3,069,624,788 ஆக இருந்ததுடன் இதற்கு ஏனைய அமைச்சுக்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 24,451,075 தொகையான செலவினம் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஒப்பந்தக் கொடுப்பனவுகளின் போது குறுக்குப்பதிவு ஆக மேற்கொள்ளப்பட்ட கணக்கு வைப்புக்களின் ஒட்டுமொத்த கூட்டுத்தொகை ரூபா 50,396,266.24 தொகை குறைக்கப்பட்டுள்ளது. அதற்கான காரணமாக உள்ளபடியாக ஏற்பட்ட காசுப்பாய்ச்சலில் இடம்பெறாமையினால் காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்படுவது உள்ளபடியான காசாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | | மாத்திரம் ஆக இருந்தமையாகும். |
| (ஈ) | செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 448,219,961 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதி ரூபா 442,428,835 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 5,791,126 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உள்ளபடியாக காசாக செலவிடப்பட்ட செலவினம் ஆகையால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பிரகாரம் சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவதானிப்பின் போது சுட்டிக் காண்பிக்கப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்றுக்காக பயன்படுத்தியது உள்ளபடியாக காசாக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ஆனமையால் குறுக்குப் பதிவு மூலம் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் நீக்கப்பட்டிருந்தது எனவும் |
| (உ) | நிதிச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட பணம் அமைச்சிற்குச் சொந்தமாக இல்லாதிருந்த போதும், வைப்புக் கணக்கு மற்றும் ஏனைய பொறுப்புக்களின் மாற்றங்களாக ரூபா 3,496,643 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிச் செயற்பாடுகள் அமைச்சிற்குச் சொந்தமாகக் காணப்படாமையினால் அவ்வாறு காண்பித்தல் பிழையானதாக இருந்தது. | வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள் கணக்குகளில் செலவினமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பொதுத்திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்தால் இது தொடர்பாக சரியான விளக்கமளிக்கப் பட்டிருக்கவில்லை. அரச கணக்குகள் திணைக்களம் உரிய பிரகாரம் விளக்கமளித்தலொன்று அல்லது செயலமர்வு மேற்கூறப்பட்ட நிலையில் விளக்கப்பட்டிருக்குமாயின் இவ்வாறான நிலைமையொன்று ஏற்பட்டிருக்காது எனவும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பாதீட்டு மதிப்பீட்டைத் தயாரித்தல்

அமைச்சிற்குரிய பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதிஏற்பாடுகளை வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீடு சாத்தியமானதாகத் தயாரிக்கப்படாமையினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பற்றாக்குறைகள் ஏற்பட்டிருந்தன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உரிய திட்டமிடலின்றி அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய 16 | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடு | ஆண்டின் இறுதியில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டங்களுக்காகவும் இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனம் (ICTA) மூலம் மேற்கொள்ளப்பட்ட 30 செயற்திட்டங்களுக்காக பெறப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 2,064.8 மில்லியன் அதாவது 40 சதவீத நிதிஏற்பாடு மீளாய்வாண்டின் போது சேமிக்கப்பட்டிருந்தது. | தயாரித்தல் மற்றும் பெறப்பட்ட நிதிஏற்பாட்டை ஆண்டின் போது செலவிடுவதற்கு திட்டமிடல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருக்க வேண்டுமாகையால் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையொன்று ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிறுவனங்களின் அபிவிருத்தி செயற்பாடுகளின் கீழ் உள்ள பற்றுச்சீட்டுக்களின் பெறுமதி ரூபா 1,215 மில்லியனாகும். அதன் பிரகாரம் அந்தக் கையிலுள்ள பட்டியல்களையும் உள்ளடக்கி இந்த அமைச்சின் அபிவிருத்தி செயற்பாடுகளின் செலவிடலின் செயல்முன்னேற்றம் ரூபா 4,524 மில்லியனாகும். அதன் பிரகாரம் அபிவிருத்தி செயற்பாடுகளின் நிதிஏற்பாட்டின் சேமிப்பு சதவீதம் 18 ஆகும். |
| (ஆ) | 05 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 4.4 மில்லியன் தொகையான மொத்தத் தேறிய நிதிஏற்பாட்டில் எந்தவொரு தொகையும் பயன்படுத்தப்படாமல் முழுமையாக சேமிப்புக் காணப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக செலவின மதிப்பீட்டைத் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் மற்றும் எதிர்காலத்தின் போது இவ்வாறான நிலைமையொன்று ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அமைச்சரினதும் அமைச்சரவையினதும் திருத்தத்துடன் கட்டிடத்தின் உள்ளக அடிப்படைத் திட்டத்தில் வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தமை மற்றும் தேவை ஏற்பட்டிருக்காமை. |
| (இ) | 03 மீண்டெழும் செலவின விடயங்களுக்காகவும், 10 மூலதன செலவின விடயங்களுக்காகவும் திட்டமிடலின்றி மிகை நிதிஏற்பாடு வழங்கப்பட்டமையின் காரணமாகவும் ஒதுக்கப்பட்ட ரூபா 5,590.27 மில்லியனில் ரூபா 3,347.14 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டமையினால் ரூபா 2,243.13 மில்லியன் சேமிப்புக் காணப்பட்டது. அது 33 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் ஆண்டின் போது மேற்கொள்ள முடியுமான பணிகளுக்காக மாத்திரம் போதியளவு நிதிஏற்பாடு பெற்றுக்கொள்ளல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். | பிரதி அமைச்சர் ஒருவர் இல்லாதிருந்த அமைச்சை திருத்தி கொள்வனவு செய்தலை நிறுத்துதல் தேவைப்படாத நிர்வாக முறைகேடுகள் காணப்பட்டமையால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சகலருக்கும் டிஜிட்டல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் அமைச்சின் பிரதான பணியாக இருந்த போதிலும், பின்வரும் விடயங்களின் பிரகாரம் அந்தத் தேவை நிறைவேற்றப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்படவில்லை. | | |
| (அ) | 2018 ஆம் வரையிலும் கையடக்கத் தொலைபேசி பெற்றுள்ள நபர்கள் 100 முதல் 150 சதவீதம் வரை அதிகரித்திருந்த போதிலும் அத்தியாவசதிய தொலைத்தொடர்பு மொடியூல் பத்திரம் கவனத்திற் கொள்ளக்கூடிய அளவில் தனி மற்றும் ஒரே நபரினால் பயன்படுத்தப்படுகின்றமையால் அந்த எண்ணிக்கையின் நிலைமை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. | சரியான பாவனையாளர் புள்ளி விபரத்தை எடுக்கக் கூடிய வகையில் நடவடிக்கை எடுத்தல். | இலங்கையில் நபர்களுக்கு கையடக்கத் தெலைபேசி சிம் கார்ட் பலவற்றைக் கொள்வனவு செய்தல் கொள்கை ரீதியாக வரையறுக்கப்படவில்லை. அவ்வாறே தொலைத்தொடர்பு தேவையின் பிரகாரமும் அந்த செலவினங்களை செய்யக்கூடிய இயலுமையின் பிரகாரமும் நபர்கள் கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்துகின்றனர். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் இணையத்தள பாவனையாளர்களின் எண்ணிக்கை 4,920,554 மற்றும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் புள்ளி விபரங்களின் பிரகாரம் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே அந்த எண்ணிக்கை 5,904,260 மற்றும் 7,263,161 | அமைச்சின் பிரதான பணியாக நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சகலருக்கும் டிஜிட்டல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் போதும் மற்றும் 2030 அளவில் | இணையத்தளத்தை பயன்படுத்துதல் நபர்களின் அடிப்படை தேவையாக இருக்கவில்லை. நபர்களினதும் குடும்பங்களினதும் வருமான மட்டத்தின் பிரகாரம் இணையத்தள வசதிகளின் கொள்வனவு இடம்பெறுகின்றது. அனேகமான சந்தர்ப்பங்களில் தமது தேவையின் நிமித்தம் |

| | | | |
|---|---|---|---|
| | ஆக இருந்தன. பாவனையாளர் எண்ணிக்கையில் அதிகரிப்பை காண்பித்த போதிலும் அந்த அளவு இலங்கையின் சனத்தொகையுடன் ஒப்பீடு செய்யும் போது மிகவும் குறைந்த பெறுமதியாகும். | நிலைபேறான நோக்கங்களையும் அடையும் போதும் சகலருக்கும் இணையத்தளத்திற்கு நுழையும் சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் திட்டமிடப்பட வேண்டும். | தற்காலிக அடிப்படையில் இணையத்தள வசதிகளை கையடக்கத் தொலைபேசி மூலம் பெறப்படுகின்றது. |
| (இ) | மேலும் 2017 ஆம் ஆண்டு வரையில் ADSL இணையத்தள வசதிகளை பெற்றுள்ள எண்ணிக்கை 768,760 அளவாக இருந்ததுடன் அதில் 48.1 சதவீதமும் மேல் மாகாணத்தில் இருந்ததுடன் 3.3 சதவீதம் முதல் 10.9 சதவீதம் வரையான அளவு ஏனைய மாகாணங்களுக்கிடையே வியாபித்திருந்தது. அதன்படி கிராமியப் பிரதேசங்களில் ADSL இணையத்தள வசதிகளின் பரவலாக்கம் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது. | ADSL அல்லது ஏனைய இலாபகரமான இணையத்தள பக்கேஜ் கிராமிய மட்டத்தில் பரவலாக்குவதற்காக தேவையான திட்டமிடலைச் செய்தல் வேண்டும். | ADSL தொழில்நுட்ப தூரங்களுக்கு அப்பால் உள்ள பிரதேசங்களுக்கு வழங்குதல் டெலிகொம் நிறுவனத்திற்கு இலாபகரமானது அல்ல. குறைந்த கிரயத்தின் கீழ் கையடக்க தொலைபேசி மூலம் இலங்கையில் இணையதளத்தை தாபிக்கும் இயலுமை உள்ளது. |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்திமட்டம் எய்தப்பெறாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டுக்கான பொருளாதாரத்தை டிஜிட்டல் மயமாக்குவதற்காக ரூபா 1,731.85 மில்லியன் நிதியேற்பாடு பெறப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அதில் 637.96 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் செலுத்துவதற்குக் காணப்பட்ட பட்டியல்களின் பெறுமதி ரூபா 89.36 மில்லியன் ஆனமையால் நிதிச் செயலாற்றல் 42 சதவீதம் மாத்திரமாக | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டி இருந்ததுடன் எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் அடையப்பட வேண்டும். | எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் அடையப் பெறாமையை ஏற்றுக்கொள்ளுகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தது. | | |
| (ஆ) | ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய 14 செயல்திட்டங்களுக்கிடையே முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் எதுவும் காணப்படவில்லை. அந்தப் 14 செயல்திட்டங்களினதும் செயலாற்றல் தொடர்பான பரீட்சிப்பின் போது 24 சதவீத முன்னேற்றத்தை பெற்ற ஒரு செயல்திட்டமும், 25 சதவீதத்திற்கும் 49 சதவீதத்திற்கும் இடையிலான செயல்முன்னேற்றத்தைப் பெற்ற 03 செயல்திட்டங்களும், 50 சதவீதத்திற்கும் 74 சதவீதத்திற்கும் இடையிலான செயல்முன்னேற்றம் ஒன்றைப் பெற்ற 04 செயல்திட்டங்களும் மற்றும் 75 சதவீதத்திற்கும் 79 சதவீதத்திற்கும் இடையே செயல் முன்னேற்றத்தைப் பெற்ற 06 செயல்திட்டங்களும் காணப்பட்டன. | ஆகக்கூடிய வினைத்திறனுடன் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய செயல்திட்டங்களை பூர்த்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆண்டின் இறுதியில் காணப்பட்ட நிர்வாக ரீதியாக தளம்பல் நிலைமையினால் ஏற்பட்ட அமைச்சின் கட்டுப்பாட்டிற்குப் புறம்பான நிலைமையினால் பிரதான செயல்திட்டங்களின் பெறுகை செயற்பாடுகள் மற்றும் கொள்வனவு செய்யும் பணிகள் என்பவற்றை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமை கிரயம் ஆகக் கூடியதாகச் செலவிடுவதை மட்டுப்படுத்துவதற்கு காரணமாக இருந்தது. |
| (இ) | மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் டிஜிட்டல் அறிவினை விருத்தி செய்வதற்காக பாடசாலை கணனி செயல்திட்டத்திற்கு மீளாய்வாண்டில் ரூபா 250 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் கடந்த ஆண்டில் பொறுப்புக்களைத் தீர்த்ததன் பின்னர் ரூபா 112 மில்லியன் மாத்திரமே அந்த பணிக்காக சேமிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 55 பாடசாலைகளில் கணனிகளை ஸ்தாபித்தல் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சி என்பன மீளாய்வாண்டின்போது இடம்பெற்றிருக்கவில்லை. | பூர்த்தி செய்யப்பட வேண்டிய பெறுகைகள் ஆண்டின் போது மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஆண்டின்போது மேற்கொள்ள முடியுமான வகையில் போதியளவான பெறுகைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | பாடசாலைகளுக்கான கணனி துணைப்பாகங்களின் பெறுகை நடைமுறைகள் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு ஆண்டின் இறுதி வரையில் இறுதிக் கட்டத்திற்கு வந்திருந்த போதிலும் அந்த ஆண்டின் இறுதியில் நிர்வாக ரீதியான தளம்பல் நிலையின் காரணமாக பெறுகை நடைமுறைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. |
| (ஈ) | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5 | நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி இலக்கிடப்பட்ட | இந்த வேலைத்திட்டங்களின் பிரகாரம் பொருத்தமான ஆராய்ச்சி நிபந்தனைகள் 12 |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 243,420 தொகை மாத்திரமே செலவிடப்பட்டு அதுவரையான செயல்முன்னேற்றம் 47 சதவீதமாக செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்தது. | செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தலைப்பில் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் தற்போது எஞ்சியுள்ள வேலைப்பகுதி உத்தியோகத்தர்கள் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு இறுதி அறிக்கை வழங்குதலே ஆகும். அதன் போது இணைப்பு 01 இன் மூலம் விபரிக்கப்பட்ட ஒட்டு மொத்த செயல்பாடுகளையும் கவனத்திற் கொண்டு அதன் முன்னேற்றம் 47 சதவீதமாக அறிக்கை இடப்பட்டுள்ளது. அதனை கிரயத்துடன் ஒப்பிடும் போது முன்னேற்றத்தைக் காண்பிக்கவில்லை. |
| (உ) | சிரேஷ்ட பிரஜைகளின் தகவல் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்யும் செயல்திட்டத்திற்காக ரூபா 4 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் எந்த ஒரு தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை. குறித்த செயல்திட்டம் காலி பிரதேச செயலகப் பிரிவில் அமுல்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் விடய பரிந்துரைகள் தயாரிக்கப்படும் வரை மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், செயல்திட்டத்தின் முன்னேற்றம் 38 சதவீதமாக செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் மிகை நிதி ஏற்பாட்டைப் பெற்றுக்கொள்வதன் மூலம் தேசிய பாதீட்டிற்கும் ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்கள் தொடர்பாக அவதானமாக இருத்தல். | ஒட்டு மொத்தமாக பௌதீக வேலை அளவினை கவனத்தில் கொண்டு அந்த அளவில் விடயப் பரிந்துரைகள் தயாரிக்கும் வரையான பகுதிக்கான செயல்முன்னேற்றமாக கருதி அந்த முன்னேற்றம் 38 சதவீதமாக கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. அந்த பணிகளில் எந்தவொரு செலவினமும் செய்யப்படவில்லை. பிரமுகர்களின் சேவையினைப் பெறுவதற்கு தொண்டர் அமைப்பொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஊ) | அரச துறையின் பதவி நிலை உத்தியோகத்தர்களின் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப திறனை மேம்படுத்தும் செயல்திட்டத்திற்காக ரூபா 43 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 4.13 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | - மேற்படி - | இந்த பயிற்சியை அரசாங்கத்தில் கட்டிட வசதிகளை பயன்படுத்தியும் ICTA நிறுவனத்தினதும் SLCERT நிறுவனத்தினதும் பங்களிப்பின் மூலம் குறித்த பயிற்சி அளித்தல் மேற்கொள்ளப்பட்டமையினால் மிகவும் தரமான பயிற்சி ஒன்று குறைந்த |

| | | | |
|---|---|---|---|
| | | | செலவினத்தில் மேற்கொள்வதற்கு முடியுமாக இருந்தது. |

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 50 வைத்திய நிர்வாக உத்தியோகத்தர்களுக்காக கணனி அறிவை மேம்படுத்தும் பயிற்சிப் பாடநெறி | | |
| (i) | இந்த நிகழ்ச்சித்திட்டம் ரூபா 1.90 மில்லியன் செலவில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இதற்காக ரூபா 3.46 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இதற்கான மொத்தக் கிரயம மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | உரிய பயிற்சி வழங்கலுக்காக பயன்படுத்துவதற்கு எதிர்பார்த்த நிறுவனத்தின் பாடநெறிகள் மற்றும் பரீட்சைக் கட்டணங்கள் என ரூபா 1,903,600 தொகை மாத்திரமே காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக விரிவுரை மண்டபம், உணவு, பானம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) | ஒரு குழுவிற்காக 25 பேர் வீதம் 02 குழுக்களின் கீழ் இந்த பாடநெறி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. ஒரு குழுவிற்காக இந்தப் பாடநெறி 12 நாட்களான நடாத்த வேண்டி இருந்த போதிலும், 12 நாட்களும் பாடநெறிக்காக 04 உத்தியோகத்தர்கள் மாத்திரமே பங்குபற்றி இருந்தனர். ஏனைய உத்தியோகத்தர்களின் வருகை 02 நாள் முதல் 11 நாள் வரையான வீச்சில் காணப்பட்டது. | தெரிவு செய்யப்பட்ட சகல உத்தியோகத்தர்களையும் உரிய கால எல்லையில் பங்குபற்றச் செய்வதற்கு தேவையான ஆகக் கூடிய முயற்சியொன்று செலுத்த வேண்டும். | வைத்தியர்கள் என்போர் அதிக பணிப்பொறுப்புக்களை உடைய தொழில் தரப்பாக இருந்ததுடன் அவர்களுக்கு பயிற்சி பாடநெறிகளுக்காக தொடர்ச்சியாக பங்குபற்றச் செய்வதற்கு முடியாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | உத்தியோகத்தர்களுக்கான ஒரு நாளொன்றின் செலவினம் ரூபா 5,340 ஆனமையால் உத்தியோகத்தர்கள் வருகை தராத 214 நாட்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 1.14 மில்லியன் தொகையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் கிடைத்ததா என்பது தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | - மேற்படி - | உரிய பாடநெறி நடாத்தப்பட்ட கால எல்லையின் போது பயிற்சி பெறுபவர்களின் வருகையை உச்ச அளவில் பேணிச் செல்வதாக சுகாதார அமைச்சு அறிவித்திருந்தது. எனினும், தவிர்க்க முடியாத நடைமுறை ரீதியிலான காரணங்களின் அடிப்படையில் பயிற்சி பெறுநர்களில் சிலருக்கு பாடநெறியில் பங்குபற்றுவதற்கு முடியாதிருந்த சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருந்தது எனவும், |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 2.16 மில்லியன் செலவில் 05 நிழற்பட பிரதி இயந்திரங்கள் மற்றும் 02 லெப்டொப் கணனிகள் என்பவற்றைப் கொள்வனவு செய்வதற்கான பெறுகைகளின் போது தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2(அ) பந்தியின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், பெறுகை செயற்பாடுகள் அதன் பிரகாரம் இடம்பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பமிடல் 2018 மே 02 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், வழங்குனர்களுடன் உடன்படிக்கை 2018 செப்தெம்பர் 21 ஆந் திகதியே கையொப்பமிடப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேலதிக தகவல்களைக் கோருவதற்கான காலமொன்றை வழங்குவதற்கு வேண்டி ஏற்பட்டமை மற்றும் மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு ஏற்பட்டமையினால் இந்தத் தாமதம் ஏற்பட்டிருந்தது. |

**(இ) உள்ளக அபிவிருத்தி - ரூபா 41.67 மில்லியன்**

---

| | | | |
|---|---|---|---|
| (i) | அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் கட்டிடத்தின் உள்ளக திருத்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட திகதி முதல் 03 மாத காலம் | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை தொடர்பான காரணங்களைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை | அமைச்சின் அன்றன்றைய அத்தியவசிய பணிகளுக்கு இடையூறு அந்த வகையில் அலுவலக நேரத்தின் பின்னர் உள்ளக நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 பெப்ரவரி 14 ஆந் திகதியளவில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2017 மே 21 ஆந் திகதி முதல் 03 வருட காலத்திற்காக கட்டிடம் வாடகைக்கு பெறப்பட்டிருந்த போதிலும், வருடமொன்றிற்கு மேற்பட்ட காலமாக திருத்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையினால் அது உச்ச வினைதிறனான பணியாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எடுத்தல் மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலையினைத் தவிர்த்தல். | இருந்தமையால் வேலை செய்வதற்கு திட்டமிடப்பட்ட காலத்தை விட அதிக காலம் எடுத்தமை காரணமாக இருந்தது. |
| (ii) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த வேலைகளின் மொத்தப் பெறுமதி ரூபா 29.01 மில்லியனாகும். அந்தப் பெறுமதியில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு அதாவது ரூபா 14.57 மில்லியன் தொகை மேலதிக வேலைக்கானதாகும். அதன் பிரகாரம் ஆலோசனை சேவைகளைப் பெற்று தயாரிக்கப்பட்ட அளவிடைப் பத்திரம் (BOQ) திருப்திகரமான மட்டத்தில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தேவையினை ஆரம்பத்தில் இனங்கண்டு முடியுமான வரை சாத்தியமான வகையில் அளவிடைப் பத்திரத்தைத் தயாரித்தல். | இறுதிப் பட்டியலில் "Extra Work" ஆக ரூபா 14,578,825 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் BOQ விடயத்தில் குறிப்பிடக்கூடிய வேறுபாடுகள் (Quantity Variations) மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட BOQ விடயத்தில் ஏற்பட்ட வேறுபாடுகளுக்கான செலவினங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 வாகனங்களும் ஒரு மோட்டார் சைக்கிளும் மீளாய்வாண்டு முழுவதும் ஓட்டத்தில் ஈடுபட்டிருக்கவில்லை. | பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மற்றும் அகற்றும் செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு | முன்னாள் அமைச்சரின் ஊடக செயலாளர் பயன்படுத்திய அந்த வாகனம் 2018 ஆம் ஆண்டில் விபத்திற்குட்பட்டிருந்தமையால் உரிய வாகனம் 2018 ஆம் ஆண்டின் போது ஓடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்க வேண்டும். | முடியாதிருந்தது. அவ்வாறே JS-3735, 17-9310, 54-3070 மற்றும் 62-0779 என்ற வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | அமைச்சின் கட்டிடத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 75.97 மில்லியன் தொகையான வாடகையும், வருடாந்த சுத்திகரித்தல் கட்டணம் ரூபா 3.08 மில்லியன் தொகை மற்றும் பாதுகாப்பு சேவைக் கட்டணம் ரூபா 4.11 மில்லியன் தொகையுமாக கட்டிடத்திற்காக ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 83.17 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 80 ஆனமையால் மீளாய்வாண்டின் போது கட்டிடத்திற்காக ஒருவருக்கு செலவிடப்பட்ட தொகை ரூபா 1.03 மில்லியனாக இருந்தது. அவ்வாறே கட்டிடத்தின் சதுர அடி 30,586 ஆனமையால் அந்த அளவிலான எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது கட்டிடம் குறைவான பயன்பாட்டுடனான நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | அமைச்சின் கீழ் காணப்படுகின்ற SLCERT மற்றும் LGII கம்பனிகள் 02 பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வாடகை அடிப்படையில் நடாத்திச் செல்லப்பட்டமையால் அந்த நிலைமையினையும் கவனத்தில் கொண்டு, வாடகைக்கு பெறப்பட்ட இந்த கட்டிடத்தை உச்ச இயலளவில் பயன்படுத்துதல் மற்றும் ஒரு நபரின் செலவினத்தைக் குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும், அமைச்சு அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆதனமொன்றினை ஸ்தாபிப்பதற்கு உள்ள இயலுமையை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். | அமைச்சிற்காக முறையான பெறுகை நடைமுறைகளின் பிரகாரம் தற்போது அலுவலகம் நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டிடம் வாடகைக்குப் பெறப்பட்டிருந்தது. இதற்காக மாற்றமடைந்து காணப்படும் கூறுவிலைகளுக்கு இடையே வருடாந்த வாடகை செலுத்த வேண்டிய அமைச்சு அலுவலகம் எந்த இடத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற போதிலும், அந்த இடத்திற்காக சுத்திகரித்தல், கட்டணம், பாதுகாப்புச் சேவைக் கட்டணம் போன்ற சேவைகளுக்காக கட்டாயம் செலுத்துதல் வேண்டும். இந்தக் கட்டிடம் வாடகை அடிப்படையில் தொலைத்தொடர்பு டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சிற்காகவே பெறப்பட்டிருந்தது. இந்த அமைச்சிற்காக அமைச்சர் பிரதி அமைச்சரை உள்ளடக்கிய அவற்றுள் அமைச்சருக்குரிய பிரிவுகளை கவனத்தில் கொண்டு தேவையின் பிரகாரம் கட்டிடம் வாடகைக்கு பெறப்பட்டுள்ளது. எனினும் 2019 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதத்தின் போது அமைச்சு மீண்டும் பகிர்ந்து ஒதுக்கும் போது இந்த அமைச்சு தொலைத்தொடர்பு டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சாக மாத்திரம் இருந்ததுடன் அதன்படி பிரதி அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. அமைச்சின் பிரதி அமைச்சருக்காக ஒதுக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| | | இடவசதிகள் மேலதிக இடமொன்றாக கணிக்கப்படுகின்றது. |

**4. நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைதல்**

------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டு வரையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் இலக்கினை அடையும் போது உரிய பணிகளை நிர்ணயிப்பதற்காக தேவையான குறிகாட்டிகள் மற்றும் கட்டங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்குரிய பணிகளை நிர்ணயிப்பதற்காக முறைமையொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை நிர்ணயிப்பதற்கான குறிகாட்டிகள் மற்றும் கட்டங்களை இனங்காணப்பட வேண்டியிருந்ததுடன் உரிய பணிகளை நிர்ணயிப்பதற்கான முறைமையொன்று அமுல்படுத்தப்படல் வேண்டும். | இந்த அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களின் அதிக அளவு பல வருட கால செயற்திட்டங்களாகும். அந்தந்த செயற்திட்டங்களின் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக உரிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் / இலக்குகள் 2017 ஆம் ஆண்டு முதல் இனங்காணப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக அமைச்சின் செயற்திட்ட முகாமையாளர்களுக்கும் தெளிவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் போதும் அந்த முறைமை பின்பற்றப்பட்டிருந்ததுடன் இந்த அமைச்சில் மனிதவளம் பற்றாக்குறையினால் அந்தந்த செயற்திட்டத்தின் கீழ் மிகவும் முறையானதும், நெருங்கிய பின்தொடர் முறைமையொன்றும் அமுல்படுத்துதல் மற்றும் அறிக்கையிடுவதற்கு முடியாதிருந்தது. |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சில் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும், நி.பி 134(3)இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 134(3) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அமைச்சில் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஒக்தோபர் மாதம் வரையிலும், ஒரு பெண் உத்தியோகத்தர் இந்த பிரிவிற்காக நியமிக்கப்பட்டிருந்தார். உத்தியோகத்தர்களின் வெற்றிடம் மற்றும் வேலைக் கடமைகள் அதிகரித்தமை போன்ற விடயங்களினால் முறையான நடவடிக்கைகளை பேணிச் செல்லலில் கஷ்ட நிலையொன்று ஏற்பட்டிருந்தது எனவும் |
| (ஆ) மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையில் உள்ளகக் கணக்காய்வில் செயலாற்றல் உள்ளடக்கப்படவில்லை. அதனால் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததா என பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | செயலாற்றல் அறிக்கையில் உள்ளகக் கணக்காய்வின் செயலாற்றல் உள்ளடக்கப்பட வேண்டும். | |

## 6. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 91 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 61 ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 30 ஆகக் காணப்பட்டது. நிதிஏற்பாடு குறைவாகப் பயன்படுத்தியதற்காகவும் மனிதவள | வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் மனித வள பற்றாக்குறைக்கு தீர்வைப் பெற்றுக் | இந்த அமைச்சில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்காக ஊழியர்களை நியமிக்கவோ அல்லது மாற்றங்கள் மூலம் அனுப்புமாறு அரச நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சிற்கு பல |

வெற்றிடம் தாக்கமளித்திருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. இந்த நிலைமை அமைச்சில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட நிலைமையினால் இதுவரையிலும் அந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டிருக்கவில்லை.

கொள்வதற்கு திட்டமிடல் வேண்டும்.

சந்தர்ப்பங்களின் போது கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன் இதுவரையிலும், அது மேற்கொள்ளப்படாதிருந்த அந்த நிலைமை அமைச்சின் செயற்பாடுகளை நடாத்திச் செல்லலில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.